# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **O.S.No.42/2019** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **வா.சா- 02 (PW-02 )** |
| **பெயர்** | :- | **மஹபூப் பாஷா த/பெ.வதூத்** |
| **தேதி** | :- | **18-08-2026** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**01 முதல் 03 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

Kings Aqua tech நிறுமம் பதிவுசெய்யப்படாத நிறுமம் என்றால் அது எனக்குத் தெரியாது. முதல்விசாரணைக்கான ஆணையுறுதியில் நான்தான் கையொப்பம் இட்டேன். நான் முதல்விசாரணையில் மேற்சொன்ன நிறுமம் பதிவுசெய்யப்படாத நிறுமம் என்று சொல்லிவிட்டு தற்போது பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன நிறுமம் எப்போது ஆரம்பிக்-கப்பட்டது என்றால் 2012-ஆம் ஆண்டு. அதில் வாதியும் பிரதிவாதிகள் மட்டும் கூட்டாளிகள் என்றால் சரிதான். அந்த நிறுமம் எப்போது கலைக்கப்-பட்டது எதற்காக கலைக்கப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது. மேற்சொன்ன நிறுமம் 2012-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபிறகு சிறிது காலத்திற்குபின் 04-ஆம் பிரதிவாதி நிறுமத்திற்கு வருவதில்லை என்றால் சரிதான்.

வாதியும் 01 முதல் 03 வரையிலான பிரதிவாதிகளும் Geyo Aqua Industries என்ற பெயரில் ஒரு நிறுமத்தை தனியாக ஆரம்பித்தனர் என்றால் சரிதான். அது பதிவுசெய்யப்பட்ட நிறுமம் என்றால் சரிதான். அந்த

நிறுமத்திற்கும் 04-ஆம் பிரதிவாதிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான். இந்த நிறுமத்தின் நிருவாக கூட்டாளியாக வாதி திருநாவுக்கரசு இருந்தார் என்றால் சரிதான். இந்த நிறுமத்தின் வரவு செலவு கணக்குகளையும் அவர்தான் கவனித்தார் என்றால் சரிதான். இந்த நிறுமத்தின் வரவு செலவு கணக்குகளை ஆண்டுதோறும் மார்ச் 31-ஆம் தேதி நிருவாக கூட்டாளி சமர்பிக்க வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு வாதி சமர்பித்தாரா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை.

Geyo Aqua Industries என்ற நிறுமத்தின் கூட்டாளிகளுக்கு இடையே எந்த ஆண்டு நான் பஞ்சாயத்து பேசினேன் என்றால் 2022-ஆம் ஆண்டு. அவ்வாறு பஞ்சாயத்து பேசியபோது ஆண்டுதோறும் வரவு செலவு கணக்கை தாக்கல்செய்தாயா என்று வாதி திருநாவுக்கரசிடம் நான் கேட்டேனா என்றால் இல்லை. Geyo Aqua Industries என்ற நிறுமம் எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்று எனக்கு நினைவில்லை. அந்த நிறுமம் ஆரம்பிக்கப்பட்டபின் நிருவாக கூட்டாளி பொறுப்பில் இருந்து வாதி எப்போது வெளியே வந்தார் என்றால் ஆரம்பித்ததில் இருந்து ஓராண்டிற்கு பிறகு வெளியே வந்தார். மற்ற கூட்டாளிகள் அவர்மீது முறைகேடு குற்றம் சுமத்தியதால் வெளியே வந்தார்.

Geyo Aqua Industries என்ற நிறுமத்தில் வாதி உரிய கணக்கு காட்டாமல் கையாடல் செய்ததாலும் முறைகேடு குறித்து மற்ற கூட்டாளிகள் கேட்டதால் அவர் நிறுமத்தின் நிருவாக கூட்டாளி பொறுப்பில் இருந்து வெளியேறினார் என்றால் சரியல்ல. நிறுமத்தின் உபகரணங்களை 01 முதல் 03 வரையிலான பிரதிவாதிகள் விற்க முயற்சி செய்ததால் நான் பஞ்சாயத்து பேசினேன் என்று நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

**04-ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

வாதி, பிரதிவாதிகளுடன் எனக்கு வணிக தொடர்பு எதுவும் இல்லை. இந்த வழக்கு தொடர்பான விவரங்கள் எனக்கு நன்றாக தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். Kings Aqua Tech நிறுமத்தின் நான் கூட்டாளி இல்லை. Geyo Aqua Industries நிறுமத்திலும் நான் கூட்டாளி இல்லை. 04-ஆம் பிரதிவாதி Kings Aqua Tech நிறுமத்தில் மட்டும் கூட்டாளியாக இருந்தார் என்றும் Geyo Aqua Industries நிறுமத்தில் கூட்டாளியாக இல்லை என்றும் சொன்னால் சரிதான். Kings Aqua Tech நிறுமத்தில் 04-ஆம் பிரதிவாதி 8 இலட்சம் உரூபாய் முதலீடு செய்தார் என்றால் எவ்வளவு முதலீடு செய்தார் என்று எனக்குத் தெரியாது. 04-ஆம் பிரதிவாதி கொடுத்த முதலீட்டை இந் நாள்வரை வாதியும் 01 முதல் 03 வரையிலான பிரதிவாதிகளும் திருப்பி கொடுக்கவில்லை என்றால் சரிதான். 04-ஆம் பிரதிவாதிக்கும் வாதிக்கும் மற்றும் 01 முதல் 03 பிரதிவாதிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு இல்லை என்றால் சரிதான். முதலீடுகளை பிரிப்பது சம்மந்தமாக என் தலைமையில் பேச்சுவார்த்தை நடந்தது என்றால் சரிதான். 04-ஆம் பிரதிவாதி கொடுத்த முதலீட்டை வாதியும் 01 முதல் 03 வரையிலான பிரதிவாதிகளும் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் 04-ஆம் பிரதிவாதி முடிவை ஏற்க மறுத்து-விட்டார். பேச்சுவார்த்தை நடந்த இடத்திற்கு 04-ஆம் பிரதிவாதி வரவில்லை என்றால் சரிதான். அவ்வாறு இருக்க 04-ஆம் பிரதிவாதி மறுத்துவிட்டார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. பேச்சுவார்த்தையின் முடிவை நான் அவரிடம் சொன்னேன் அப்போது மறுத்தார். நான் எப்போது அவரிடம் தெரிவித்தேன் என்று முதல்விசாரணையில் சொல்லவில்லை

என்றால் சரிதான். வாதிக்கு ஆதரவாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi, B.L.,
Additional District&Session Judge,
Salem.